
நீங்காத நினைவுகள்



தந்தை பெரியார் அவர்கள்

யார் பெருந்தொண்டர்

லயா சக்திமோகன்

தந்தை பெரியார் நற்பணி மன்றம்

திருவொற்றியூர், சென்னை - 600 019

அமைப்பு : 1979

நோக்கம் : இம்மன்றம் : தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளை மக்களிடையே பரப்பி—அவர்தம் புகழ்பாடும்.

இமமன்றம் : தந்தை பெரியார் அவர்களை தங்கள் தலைவராகவும், அவர்தம் கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களையும் இம்மன்றம் ஏற்றுக்கொள்ளும்.

இம்மன்றம் : சமூக, சமுதாய சீர்திருத்த பணிகளை செய்யும்

மன்ற புரவலர்கள்

பேராசிரியர் டாக்டர் **மா. நன்னன்**, M.A. அவர்கள்

உவமைகவிஞர் சுரதா அவர்கள்

கவியரசர் : **பொன்னிவளவன்** அவர்கள்

சிலம்பொலி : **செல்லப்பன்**, M.A., L.T., B.L.

டாக்டர் குருவிகரம்பை சண்முகம், M.A.

மன்ற ஆலோசகர்கள்

திருமிகு. மா. வெ. நாராயணசாமி, Ex. M.L.A.

தா. வி. அன்புகண்ணன், B.A.

டி. கே. பழனிசாமி, EX. M.C.

செயற்குழு

தலைவர்	:	**சக்திமோகன்**, பெரியார் பெருந்தொண்டர்
துணைத்தலைவர்	:	**த. கிருட்டிணமூர்த்தி**, EX. M.C.
,,		V. **ராமநாதன்**
செயலாளர்	:	P. **செல்வராசு**
துணைச்செயலாளர்	:	K. **இராமலிங்கம்**, B.COM.
பொருளாளர்	:	S. **கண்ணப்பன்**, EX. M.C.

பொதுக்குழு

மு. வரதராசன், EX. V.C.
V. இராமசாமி
C. குமாரசாமி
சு. துரைபாரசன்
S. I. வெங்கட்டராமன்
கரு. அழகப்பன்
மு. வேணுகோபால்
G. எத்திராசு
K. M. சுந்தரம்
N முருகேசன்
S. ஆறுமுகம்

நீங்காத நினைவுகள்

பெரியார் பெருந்தொண்டர்
சக்திமோகன்

வெளியீடு :
தந்தை பெரியார் நற்பணி மன்றம்
768, திருவொற்றியூர் நெடுஞ்சாலை
திருவொற்றியூர், சென்னை-600 019



நீங்காத நினைவுகள்

பெரியார் பெருந்தொண்டர்
சக்திமோகன்

வெளியீடு :
தந்தை பெரியார் நற்பணி மன்றம்
768, திருவொற்றியூர் நெடுஞ்சாலை
திருவொற்றியூர், சென்னை-600 019



என்னுரை

இந்த சிறிய ஏடு எனை அறிமுகப்படுத்திக்கொள்ளவே—இன்றைய இளைஞர்களுக்காகவே இதை தொகுத்தேன். இதுவே என்னைப்பற்றிய முழு விபரமல்ல. சில குறிப்புகளே. என்னின் முழு விபரமும்—மலேயா திராவிடர் கழக ஆரம்ப கால பணியும்—மலேயா நாட்டின் கால வளர்ச்சியும், சமூக, சமுதாய மறுமலர்ச்சியும் கொண்ட விபரமான தொகுப்பு நூல் ஒன்று வெளியிட நினைந்தேன். பெரிய சுமையாக இருந்தது—இப்பொழுது அத்தகைய சுமையை சுமக்க எனக்கு வலுவில்லை, அதனால் அதை விடுத்தேன்.

மலேயா நாட்டில் தமிழர்கள் நூராண்டு கால வாழ்க்கையை முறையாக—படிப்படியாக தொகுததால், வியப்புக்குரிய விபரமறிய கிடைக்கும் தமிழர்கள் முன் முதல் தமிழகத்திலிருந்து மலேயா நாட்டிற்கு எப்படி வந்தார்கள்? எந்த நிலையில் எந்த முறையில் வந்தார்கள்? வந்தவர்கள் வாழ்ந்த நிலை என்ன? சாதி சனாதனம் இங்கேயும் அவர்களை ஒற்றுமையாக வாழவிடவில்லை—அதனால் பல்வேறு கொடுமைக்கு ஆளானார்கள். அந்த தொல்லைகளிலிருந்து மீள தன்மான உணர்வு மேலிட்டது. உணர்வின் உந்தலால் தன்மான இயக்கம் பீரிட்டு சமுதாய சீர்திருத்த சங்கங்கள் தோன்றின. தமிழர் சீர்திருத்த சங்கங்கள் மருத்துவர்கள் சங்கங்கள்—ஆதிதிராவிட சமூக சீர்திருத்த சங்கங்கள்—முஸ்லீம் லீக் போன்ற அமைப்புகள் தோன்றி தமிழ்பெரு மக்களிடையே சாதிபேதமற்ற சமத்துவ சமுதாயம் காண நற்பணியாற்றின. அப்பணியின் விளைவால் உதயமான அகில மலேயா திராவிடர் கழகம் மலேயாவில் வாழ்ந்த அனைத்து திராவிடர்களுக்கும் அமைப்பு முறையில் சீரிய

பணியாற்றின. அந்த பணி கால வளர்ச்சியால் நூற்றுக்கு
அதிகமான கிளை கழகங்களை தோற்றுவித்து இன்று தேசிய
உணர்வுடன் சமுதாய சீர்திருத்த நற்பணிகளை நல்ல
வில் எல்லோருக்கும் சம வாய்ப்பு கிடைக்கும் அள
மலேசிய திராவிடர் கழகம் என்ற பெயரில் செயல்படுகிறது. வகையில்
இந்த நற்பணி திருமிகு. தேசிய தலைவர் திருச்சுடர்
K. R. இராமசாமி, A.M.N. அவர்கள் தலைமையில், கழக
அறிஞர் பெருமக்களும், கிளை கழக பொறுப்பாளர்களும்,
சிந்தனையாளர்களும் இணைந்து செயல்படுவதாக அறிய
முடிகிறது. அக்கழக ஆட்சிக்குழு காப்பாளர்களை நினைந்து
பெருமை கொள்கிறேன் வெல்க அவர்தம் நற்பணி.

மலேசிய நாட்டில் தமிழர்களின் வாழ்வும்---வளர்ச்சியும் என்ற தொகுப்பை பின் வெளியிட விரும்புகிறேன். இந்த சிறிய ஏடு காலத்தால் எனைவிட பெரும் பணி செய்து தியாகிகள் இடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் என் கண்மணிகளின் காலடியில் வைத்து வணங்குகிறேன்.

இச்சிறு ஏடு வெளிவர எல்லாப் பொறுப்புகளையும்
எடுத்துக்கொண்ட திருவொற்றியூர் நகர திராவிடர் கழகத்
தலைவர் திரு. கரு. அழகப்பன் அவர்களுக்கும், நல்ல
முறையில் அச்சிட்டு கொடுத்த பாரி பிரிண்டர்ஸ் உரிமையா
ளர் திரு. மா. வெ நாராயணசாமி, Ex. M.L.A. அவர்களுக்
கும் பாரி பிரிண்டர்ஸ் தொழிலாள நண்பர்களுக்கும், வெளி
யிட்ட தந்தை பெரியார் நற்பணி மன்ற நிர்வாகிகளுக்கும்
எனுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

(சந்த்மோகன்)

என்னுரை

இந்த சிறிய ஏடு எனை அறிமுகப்படுத்திக்கொள்ளவே—இன்றைய இளைஞர்களுக்காகவே இதை தொகுத்தேன். இதுவே என்னைப்பற்றிய முழு விபரமுமல்ல. சில குறிப்புகளே. என்னின் முழு விபரமும்—மலேயா திராவிடர் கழக ஆரம்பகால பணியும்—மலேயா நாட்டின் கால வளர்ச்சியும், சமூக, சமுதாய மறுமலர்ச்சியும் கொண்ட விபரமான தொகுப்பு நூல் ஒன்று வெளியிட நினைந்தேன். பெரிய சுமையாக இருந்தது—இப்பொழுது அத்தகைய சுமையை சுமக்க எனக்கு வலுவில்லை, அதனால் அதை விடுத்தேன்.

மலேயா நாட்டில் தமிழர்கள் நூராண்டு கால வாழ்க்கையை முறையாக—படிப்படியாக தொகுததால், வியப்புக்குரிய விபரமறிய கிடைக்கும். தமிழர்கள் முதன் முதல் தமிழகத்திலிருந்து மலேயா நாட்டிற்கு எப்படி வந்தார்கள்? எந்த நிலையில் எந்த முறையில் வந்தார்கள்? வந்தவர்கள் வாழ்ந்த நிலை என்ன? சாதி சனாதனம் இங்கேயும் அவர்களை ஒற்றுமையாக வாழவிடவில்லை—அதனால் பல்வேறு கொடுமைக்கு ஆளானார்கள். அந்த தொல்லைகளிலிருந்து மீள தன்மான உணர்வு மேலிட்டது. உணர்வின் உந்தலால் தன்மான இயக்கம் பீரிட்டு சமுதாய சீர்திருத்த சங்கங்கள் தோன்றின. தமிழர் சீர்திருத்த சங்கங்கள் மருத்துவர்கள் சங்கங்கள்—ஆதிதிராவிட சமூக சீர்திருத்த சங்கங்கள்—முஸ்லீம் லீக் போன்ற அமைப்புகள் தோன்றி தமிழ்பெரு மக்களிடையே சாதிபேதமற்ற சமத்துவ சமுதாயம் காண நற்பணியாற்றின. அப்பணியின் விளைவால் உதயமான அகில மலேயா திராவிடர் கழகம் மலேயாவில் வாழ்ந்த அனைத்து திராவிடர்களுக்கும் அமைப்பு முறையில் சீரிய

பணியாற்றின. அந்த பணி கால வளர்ச்சியால் நாற்றுக்கு அதிகமான கிளை கழகங்களை தோற்றுவித்து இன்று தேசிய உணர்வுடன் சமுதாய சீர்திருத்த நற்பணிகளை நல்ல அளவில் எல்லோருக்கும் சம வாய்ப்பு கிடைக்கும் வகையில் மலேசிய திராவிடர் கழகம் என்ற பெயரில் செயல்படுகிறது. இந்த நற்பணி திருமிகு. தேசிய தலைவர் திருச்சுடர் K. R. இராமசாமி, A.M.N. அவர்கள் தலைமையில், கழக அறிஞர் பெருமக்களும், கிளை கழக பொறுப்பாளர்களும், சிந்தனையாளர்களும் இணைந்து செயல்படுவதாக அறிய முடிகிறது. அக்கழக ஆட்சிக்குழு காப்பாளர்களை நினைந்து பெருமை கொள்கிறேன். வெல்க அவர்தம் நற்பணி.

மலேசிய நாட்டில் தமிழர்களின் வாழ்வும்—வளர்ச்சியும் என்ற தொகுப்பை பின் வெளியிட விரும்புகிறேன். இந்த சிறிய ஏடு காலத்தால் எனைவிட பெரும் பணி செய்து தியாகிகள் இடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் என் கண்மணிகளின் காலடியில் வைத்து வணங்குகிறேன்.

இச்சிறு ஏடு வெளிவர எல்லாப் பொறுப்புகளையும் எடுத்துக்கொண்ட திருவொற்றியூர் நகர திராவிடர் கழகத் தலைவர் திரு. கரு. அழகப்பன் அவர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டு கொடுத்த பாரி பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. மா. வெ நாராயணசாமி, Ex. M.L.A. அவர்களுக்கும் பாரி பிரிண்டர்ஸ் தொழிலாள நண்பர்களுக்கும், வெளியிட்ட தந்தை பெரியார் நற்பணி மன்ற நிர்வாகிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள,



(சந்தமோகன்)



தியாகி கணபதி அவர்கள்

"காலத்தால் காணாமல் போன எனது உடன்பிறப்புகளை நினைந்து பார்க்கிறேன். கண்ணீரால் அவர்கள் தம் காலை கழுவி முத்தமிட்டு இச்சிறு ஏட்டை அவர்கள் நினைவாக வெளியிட்டு வணங்குகிறேன்."

பெரியார் பெருந்தொண்டன்

சக்திமோகன்



தந்தை பெரியார் அறிவுரை

ஜாதி ஒழிய வேண்டுமா ?

நண்பர்களே ! நாங்கள் ஆதிதிராவிடர்களைப் பற்றிப் பேசும்போது, பார்ப்பனர்கள் மனவருத்தம் அடைவதில் அர்த்தம் உண்டு, ஆனால் பார்ப்பனரல்லாதார் மனவருத்தமடைவதில் சிறிதும் அர்த்தமில்லை. அது வெறும் முட்டாள்தனமும், மானமற்ற தன்மையுமேயாகும், ஏனெனில் நமது சமூகத்தில் பார்ப்பனர் என்கிற கூட்டத்தாராகிய 100க்கு 3 வீதமுள்ள ஜனத்தொகை நீங்கி மற்ற ஜனங்களுக்கு இந்த நாட்டில் சூத்திரன் (அடிமை) தேவடியாள் வயிற்றுப் பிள்ளைகளை ஆதிதிராவிடன் என்கிற பட்டமில்லாமல் வேறு எந்த பட்டத்தோடாவது யாராவது இருக்கமுடியுமா ? இருக்கிறார்களா ? என்று கருதியும், அனுபவத்தைக் கொண்டு பாருங்கள் ! சூத்திரன் என்கிற 'கலத்தில்' நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்களுக்குச் சிறிதாவது மானம் இருந்தால், பறையன் என்கிற பட்டம் போகவேண்டுமென்பதில் கடுகளவாவது வருத்தமிருக்குமா ?

பறையன் பட்டம் போகாமல் உங்களுடைய சூத்திரப் பட்டம் போய்விடும் என்று கருதுகிறீர்களேயானால் நீங்கள் வடிகட்டின முட்டாள்களேயாவீர்கள்.

('குடி அரசு' 11—10—1931)



மாவீரன்
சுபாஸ் சந்திரபோஸ்

இந்திய நேஷனல் ஆர்மி

இந்திய விடுதலையின் விடிவெள்ளி
வங்கத்தின் சிங்கமே!
மலாயா நாட்டு மக்களை
இந்தியாவின் விடுதலைக்கு
வீறுகொண்டெழச் செய்த
விண்ணின் மதியே
நின் காலடியில் எங்கள்
தலை சாய்த்து வணங்குகிறோம்
இந்திய மண் உள்ளளவும்
நின் நினைவலைகள் ஓயாது.

சக்திமோகன்
பெரியார் பெருந்தொண்டர்
முன்னாள் இந்திய சுதந்திர கழக உறுப்பினர்

ஜாதி ஒழிய வேண்டுமா?

டாக்டர் அம்பேத்கார்

அவர்களின்

தெளிவான தீர்ப்பு



"நம் துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம் இந்த இந்து மதம்தான். உலகிலுள்ள அனைத்து மதங்களிலும் சாதி ஏற்றத் தாழ்வுகளையும் தீண்டாமையையும் ஏற்படுத்தி வைத்துள்ள மதம், இந்துமதம் ஒன்றுதான்."

"இந்து மதமும் அதன் சமூக அமைப்பும், நம்மை மிகவும் கீழ் நிலைக்குத் தள்ளிவிட்டது. ஆனால், இது இந்த அளவில் நிற்பதல்ல. இம்மதம் இந்துக்களையே அழிப்பதோடு, கடைசியில் இந்திய நாட்டையே சீரழிக்க இருக்கிறது."

"இந்திய நாகரீகத்தைக் கெடுக்கும் நஞ்சாக இருந்தது—இருப்பது பார்ப்பனீயமே! இந்திய நாட்டை மேம்பாடு அடையச் செய்யக் கருதினால், அதற்குப் பார்ப்பனீயத்தை ஒழித்தாலே போதும்!



பொதுத்தொண்டு

பேரறிஞர்
பெருந்தகை அண்ணா

நண்பனே வா!

பொதுத்தொண்டு செய்ய விரும்புகிறாயா?

வா உனது வரவை கண்டு மகிழ்கிறேன், வரவேற்கிறேன்.

பொதுத்தொண்டென்பது பூணும் ஆபரணங்கள் அல்ல.

பொதுத்தொண்டென்பது தேனிலே துவைத்தெடுத்து தின்னும் பலாச்சுளை அல்ல.

இரும்பு சங்கிலியை மாட்டிக்கொள்ள நெஞ்சில் இடம்தர வேண்டும்.

பெருந்தொண்டு செய்துவிட்டதாக எண்ணி அலட்டிக் கொள்ளாதே.

அதோ பார்! உலகிற்கு உணவளிக்கும் ஏர் உழவனை. உணவை சமைக்க: அவன் ஏர் உழுகிறான். அவன் மனைவி நாற்று நடுகிறாள். அவன் பிள்ளைகள் ஏர் உழவிற்கு வேண்டிய மாட்டை மேய்க்கிறார்கள். ஒரு குடும்பம் முழுதுமே உழைத்து இவ்வுலகிற்கு உணவளிக்கிறது. அவர்களைவிட நாம் என்ன செய்துவிட்டோம் இவ்வுலகிற்கு? எண்ணிப்பார்.


அன்பன்,
C. N, அண்ணாதுரை,
தனி அனுபந்தம்,
திராவிட நாடு 1945

இவர்தான்
பெரியார்



கலைஞரின் படபிடிப்பு

எரிமலையாய்ச் சுடுதழலாய் இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடியொலியாய்
இனஉணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச்சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும்பேசுகின்ற ஏதென்சுநகர் சாக்ரடீசாய்
ஏன்?என்றுகேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
என்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்.



நாத்தீக கவி(கலை)ஞர்

தமிழக தஞ்சை தரணியில் தந்தை பெரியார் அவர்கள்
நூற்றாண்டு நிறைவு விழாவின்போது
கழகப் பொதுச்செயலாளர்
கி. வீரமணி, M.A.,B.L., அவர்களால் தோழர் சக்திமோகன்
அவர்களுக்கு "பெரியார் பெருந்தொண்டர்" என்று
சிறப்பித்து வழங்கிய பட்டய வாசகம்:

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

கடவுள் இல்லை



இல்லவே இல்லை

பெரியார் பெருந்தொண்டர்

மலேயா சக்திமோகன்

கி. வீரமணி
பொதுச் செயலாளர்
திராவிடர் கழகம்

17—9—1979

மாண்புமிகு

டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், M.A.

அவர்களின் கேள்வி?

இந்த நாட்டுக்குரிய அரசியல் சட்டத்தை வழங்கியவர் டாக்டர் அம்பேத்கார்! உலகில் மதிக்கத் தகுந்த பேரறிஞர் அவர்; அவருடைய உருவப் படத்தை எத்தனை பேர் வீட்டில் மாட்டி வைத்திருக்கின்றோம்? படித்தவர்கள் வீட்டில் கூட அப்பேரறிஞர் படம் இல்லையே!

அதே நேரத்தில் சங்கராச்சாரியார் படத்தை வீட்டுக்கு வீடு மாட்டி வைத்திருக்கிறார்களே! யார் இந்த சங்கராச் சாரியார்? அவருக்கும் இந்த சமுதாயத்திற்கும் என்ன சம்பந்தம்?

அவர் செய்த சமுதாயத் தொண்டு என்ன? அதிகமாகச் சொன்னால் அவர் ஒரு மதத் தலைவர் அவ்வளவுதானே! அவர் காலில் சென்று விழும் மட்டிகளும் இன்னும் இருக் கிறார்களே! அவரை மதிப்பவர்கள் இந்த நாட்டுக்கு அரசி யல் சட்டத்தைத் தந்த பெருமகன் டாக்டர் அம்பேத்கார் அவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ளவில்லையே!

— விடுதலை 10-7-81

மலேசிய திராவிடர் கழகத்தால் வழங்கப்பட்ட
சிறப்பு சான்றிதழ்

மலேசியா திராவிடர் கழகம்
PERSATUAN DRAVIDIAN MALAYSIA
MALAYSIAN DRAVIDIAN ASSOCIATION, H. Q.

தலைமையகம்/IBU PEJABAT :
53B, Jalan Berangan, Port Kelang

நிறுவியது : Estd.	1946	TEL. No. 386087	பதிவு எண். Reg. No. 184

காப்புறை : .... நாள்/Tarikh : 25—5—74

அறிவு உயர் கலவி பண்பு நல் வாழ்க்கையும்; ஆனறமைந்த செறிவுறு நற்பொருள் பேணி; திராவிடர் சீருயர்த்தி நறியிலாத் தீச்சாதிச்சூழ் மேல் சழக்கு நிலையகற்றி சிறப்புறு தொண்டிற் கழகம் சிறக்கச் செயற்படுமே!

சிறப்புச் சான்றிதழ்

1946ஆம் ஆண்டு மலேசியாவில் "திராவிடர் கழகம்" முதன்முதலில் தோற்றுவிக்க முக்கிய பங்காற்றியவர்களில் உயர்திரு! ஏ. எல். சக்திமோகன் அவர்களும் ஒருவராவார்.


மலேசியாவில் ஜொகூர் மாநிலத்தில் - பத்து பகாட்டில், மலேசிய திராவிடர் கழகப் பணிக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

இவரது தொடக்க காலப்பணியைப் பாராட்டி இச்சிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அன்புடன்,

கே. ஆர். இராமசாமி, ஏ.எம்.என்.
தேசியத் தலைவர்
மலேசிய திராவிடர் கழகம்

மலேசியா திராவிடர் கழக தேசியத் தலைவர்
திருச்சுடர் K. R. இராமசாமி, A.M.N.
அவர்களும், அவர்தம் குழுவினர்களும்
தமிழ்நாடு வருகையும்—வரவேற்பும்



பெரியார் பெருந்தொண்டர்
சக்திமோகன்

தேசியத் தலைவர்
K. R. இராமசாமி, A.M.N.

18-10-79ல் திருவொற்றியூரில் தேசிய தலைவர் அவர்களை வரவேற்று பாராட்டி, வாழ்த்து மடல் வாசித்தளிக்கப்படுகிறது

தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் கலந்துகொள்ள தமிழகத்திற்கு மலேசியா, சிங்கப்பூர் திராவிடர் கழக சார்பில் கழகத் தோழர்களும், அறிஞர் பெருமக்களும் மலேசியா திராவிடர் கழக தேசியத் தலைவர் திருச்சுடர் K. R. இராமசாமி, A.M.N. அவர்கள் தலைமையில் அவர்தம் குழுவினர்களும் வருகை தந்தபொழுது சென்னை விமான நிலையத்தில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி, M.A.,B.L., அவர்கள் தலைமையில் திராவிடர் கழக சார்பிலும், கழக மகளிர் அணி சார்பிலும், கழக இளைஞர் அணி சார்பிலும், தந்தை பெரியார் நற்பணி மன்ற சார்பிலும் மலர் மாலை அணிவித்து சிறப்புமிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

18-10-79-ல் திருவொற்றியூரில் தந்தை பெரியார் நற்பணி மன்ற சார்பிலும், திராவிடர் கழகச் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகச் சார்பிலும் தேசியத் தலைவர் திருச்சுடர் K. R. இராமசாமி A.M.N. அவர்களுக்கும், அவர்தம் குழுவினர்களுக்கும் சிறப்புமிக்க வரவேற்பும், விருந்தோம்பலும், பாராட்டுப் பொதுக்கூட்டமும் நடத்தப் பட்டது.

தலைவர் அவர்களுக்கும் அவர்தம் குழுவினர்களுக்கும் திருவொற்றியூர் திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் வரவேற்று மலா மாலை அணிவித்து குளிர்பான விருந்து அளித்து கலந்துரையாடி மகிழ்ந்தனர்— என்பீல்டு இந்தியா லிமிடெட் (மோட்டார் சைக்கிள் கம்பெனி) நிர்வாகத்தின் சார்பில் திரு. V. கோபால், WIR அவர்கள், தலைவர் அவர்

களுக்கும், அவர்தம் குழுவினர்களுக்கும் சிறப்பான தேனீர் விருந்தளித்து மகிழ்ந்தனர். என்பீல்டு தொழிற்சாலை இயங்கும் நிலையை சுற்றிக் காண்பித்து விளக்கிச் சிறப்பித்தனர். என்பீல்டு இந்தியா தொழிற்சங்க சார்பில் அதன் செயலாளர் திரு. V இலட்சுமணன் அவர்களும் அவர்தம் குழுவினர்களும் தலைவர் அவர்களையும் அவர்தம் குழுவினரை யும் வரவேற்று மாலை அணிவித்து சிறப்பு நிகழ்ச்சி நடத்தினார். திருவொற்றியூர் மக்கள் சார்பில் ITC தொழிற்சங்கக் கட்டிடத்தில் பிற் பகல் தலைவர் அவர்களுக்கும், அவர்தம் குழுவினர்களுக்கும் சிறப்புமிக்க விருந்தளிக்கப்பட்டது. மாலை திருவொற்றியூர் சன்னதித் தெருவில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் மலேசியா திராவிடர் கழகம், மலேசிய மக்களுக்கு தேசிய உணர்ச்சியுடன் ஆற்றிவரும் நற்பணியைப் பாராட்டி சிறப்பிக்கும் வகையிலும், தேசியத் தலைவர் திருச்சுடர் K R. இராமசாமி A.M.N. அவர்களின் பணியினைப் போற்றி பாராட்டும் வகையிலும் வாழ்த்தி மடல்வாசித்தளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி யில் கவிஞர் சுரதா, தலைவர் பெ. தேவசகாயம், (மதுரை மா.தி.க.) தலைவர் சி. பி. இராசமாணிக்கம், (செங்கை மா. தி.க. செயலாளர்) கனகசபை (தெ.ஆ மா.தி.க), பார்வதி (மகளிர் தி.க,) குணசீலன் (தொழிலாளர் தி.க), மா. வெ. நாராயணசாமி, Ex M.L.A., புலவர் முத்துவாவாசி, M.A. T. K. பழனிசாமி, Ex. M.C., (நகரதி.மு.க. செய லாளர்) தா.வி அன்புக்கண்ணன், B.A, கரு. அழகப்பன் நடராசன் (ITC) மோகன்கோபால் (ITC) வீ. இராமசாமி (செயலாளர் தி. க) P. செல்வராசு, சக்திமோகன், T. T. மாசிலாமணி, S. I. வெங்கட்ராமன், மு. வரதராசன், C. குமாரசாமி, M. மணிமாறன், த. கிருட்டிணமூர்த்தி, Ex. M C., வி. இராமனாதன், இரா. அப்பாராவ், கனகசபை, K. பரசுராமன், T. முருகேசன், கண்ணப்பர், Ex.M.C., A. V. ஆறுமுகம், நமச்சிவாயம், K. K. பெரியசாமி, கணபதி. செல்லபாண்டியன், துரையரசன், குருசாமி தி. வ. விஸ்வநாதன், வேணுகோபால், கோபிநாத், சிவக்கொழுந்து, புழல் பக்கிரி, K. சண்முகம், தேவசகாயம், A. K. சாமி வீரகாளை, எத்திராசு, பொம்மன், S. M பாரதிமோகன் செயாளர் இளைஞர் அணி தி க. மற்றும் பலர் கலந்து சிறப்பித்து தலைவர் அவர் களைப் பாராட்டி பேசினார்கள்.

மலேசிய தேசிய தலைவர் அவர்களுக்கும் தொழிலாளர் தலைவர் அவர்களுக்கும்

வரவேற்பு

19-7-80 அன்று மலேசியா திராவிடர் கழக தேசிய தலைவர் திருச்சுடர் K. R. இராமசாமி, A.M.N. அவர்களுக்கும், மலேசியா தொழிலாளர் சங்க துணைப் பொதுச் செயலாளர் திருமிகு இலட்சுமணன் அவர்களுக்கும் திருவொற்றியூரில் வரவேற்பும் விருந்தும் அளிக்கப்பட்டது.

திரு. டாக்டர் A. சின்னதுரை, M.B.,B.S., அவர்களும், வழக்கறிஞர் திரு. M. A. R. ஷெரிப், B.A.,B.L., அவர்களும், A. முத்துக்கிருட்டிணன், இன்ஜினியர் அவர்களும் தலைவர்களை வரவேற்று சிறப்பான தேனீர் விருந்தளித்தனர்.


அன்று மாலை 6 மணியளவில் I.T.C. தொழிலாளர் சங்க கட்டிடத்தில் திருவொற்றியூர் மக்கள் சார்பாக ஒரு கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.

திரு. M. A. R. ஷெரிப் அவர்கள் வரவேற்புரைக்குப்பின் திரு. Dr. A. சின்னதுரை அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் திருவொற்றியூரில் அனைத்துக் கட்சி சார்பிலும் மற்றும் பொது நல சங்கங்கள் சார்பிலும் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

தலைவர்கள் : கேள்விகளுக்கு தெளிவான விளக்க உரை நிகழ்த்தி நிறைவு செய்தனர்.

கலந்துரையாடல் கூட்டம் முடிந்த பிறகு அவர்கள் இருவருக்கும் மற்றும் திருவொற்றியூர் நகர திராவிடர் கழக உறுப்பினர்களுக்கும், திருவொற்றியூர் நகர திராவிடர் கழக தலைவர் கரு. அழகப்பன் அவர்கள் இல்லத்தில் சிறப்புமிக்க விருந்தோம்பல் கொடுக்கப்பட்டது.

நினைவும் - நிலையும்



பள்ளியும் - வளர்ச்சியும்

1927ல் மலேயா பத்துபகாட்டில் (JOHARE St) அரசாங்க மருத்துவமனையில் பிறந்தேன. எனது தாய், தந்தையர்கள் 1914க்குப்பின் (முதல் உலக மகா யுத்தத்திற்குபின்) மலேயா தேசத்திற்கு பிழைக்க வந்தவர்கள். சஞ்சி ஒப்பந்தம மூலம் (இது ஓர் கொத்தடிமை ஒப்பந்தம்) என் தகப்பனார் பத்துபகாட் நகரில் அரசாங்க் தொழிலாளியாக வேலை செய்தார். நான் 5வயது பையனாக இருந்த பொழுது, பத்துபகாட் பிரைவேட் ஆங்கில பள்ளிக் கூடத்தில் படித்தேன். பின் மூவாரில் (1933ல்) ஆதி திராவிடர் கழக விடுதியில் தங்கி தமிழ் படித் தேன். 1935ல் பத்துபகாட்டில் ஆதி திராவிட சமூக சீர்திருத்த சங்க தமிழ் பள்ளியில் படித்தேன். (அந்த நாள் வேறு தமிழ் பள்ளிகூடங்கள் கிடை யாது) அப்பள்ளியின் ஆசிரியர்கள் : மாண்புமிகு N. S, மணியம் அவர்கள், மாண்புமிகு :

K. K. செங்காசலம் அவர்கள், மாண்புமிகு கோவிந்தராசு அவர்கள் மாண்புமிகு சுந்தவனம் அவர்கள் போன்ற ஆசிரிய அறிஞர் பெருமக்கள் தமிழ் கல்வியுடன்: பகுத்தறிவு, சுயமரியாதை உணர்வுகளையும் சேர்த்து பயிற்றுவித்தார்கள். நன்றியுடன் அவ்வாசிரிய பெருமக்களை நினைவுக் கொள்கிறேன்.

முதன் முதலில் நான் கலந்துகொண்ட சீர்திருத்த இயக்க கூட்டம்:

1937ல் பத்துபகாட் சீனர் சங்க கட்டிடத்தில் (Chinese Association) தமிழர் சீர்திருத்த சங்க கூட்டம் நடந்தது—அந்த கூட்டத்தில் நானும் எனது நண்பர்கள் பழனிசாமி, மாணிக்கம் மற்றும் சிலரும் கலந்து கொண்டோம். பெரும் மரியாதைக்குறிய பெரியோர்கள்; மாண்புமிகு கோ. சாரங்க பாணி அவர்கள் (தமிழ் முரசு ஆசிசியர்), திருமிகு. சி. வி. குப்புசாமி அவர்கள், அங்கமுத்து அவர்கள், திருமிகு. T. S. குருசாமி அவர்கள், திருமிகு. சொக்கன் அவர்கள் மற்றும பல பெரியோர்களும் சிறப்பு பேச்சாளர்களாக வந்திருந்தனர் கூட்டம் மாலை 6 மணிக்கு துவங்கி இரவு 10 மணி அளவில் முடிந்தது—கூட்டத்திற்கு அறுபதுக்கு மேற்பட்டவர்கள் வந்திருந்தார்கள். அன்றைய கால கட்ட நிலையை படம்பிடித்து காட்டும் வகையில் அன்றைய மலேயா தமிழ் சமூகத்தில, சாதியின் கொடுமையும், மக்கள் சமுதாயத்தில் மூட பழக்க வழக்கங்களும் எந்த அளவு பீடித்திருக்கின்றன—அறியாமை யால் மக்கள்படும் அவதியை விளக்கி—சிந்தனையை தூண்டி விட்டார்கள். தமிழகத்தில் ஈ. வெ. இராமசாமி, அவர்கள் சுயமரியாதை இயக்கம் கண்டு, சுயமரியாதை—தன்மான பிரசாரம் செய்துவரும் பணியினையும்—ஈ. வெ. இராமசாமி அவர்களையும் நல்லமுறையில் அறிமுகப்படுத்தி விளக்கிபேசி தமிழன் இன உணர்வை ஊட்டினார்]

ஈ. வெ. இராமசாமி அவர்கள்

1929ல் தந்தை பெரியார் அவர்களும்—அன்னை நாகம்மை அவர்தம் குழுவினர்களும்—முதன் முதலில் மலேயா

சுற்றுபிரயாணம் வந்திருந்தபொழுது—பத்துபகாட் மருத்துவ நகருக்கும் வருகை தந்தார்கள்—அவர்களை வரவேற்று சிறப்பித்த அதன் முழுபணியும் பத்துபகாட் மருத்துவ சமூகத்தை சேர்ந்தவர்களும், ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவர்களும், முஸ்லீம் பெருமக்களும் அய்யாவையும் அவர்தம் குழுவினர்களையும் வரவேற்று சிறப்பித்து, விருந்தளித்து—நிழல் படமெடுத்துள்ளனர். உயர்திரு. சொக்கன் அவர்களும் மற்றும் பல பெரியோர்களும் பெரும் முயற்சி செய்து இந் நிகழ்ச்சியை நடத்தியுள்ளதாக பின் வரலாற்று மூலமும்—நிழல்பட மூலமும். அறிந்தேன்—அப் பெருமக்களுக்கு தலை வணங்கி நன்றி செலுத்துகிறேன்.

இக் கூட்டத்திற்கு பின்தான் எனது சிந்தனையும்—உணர்வும் சமூகத்தில் சாதி கொடுமையும்—மூட பழக்க வழக்கங்களும்—மனித உரிமை பறிப்பும்—ஏற்ற தாழ்வு நிலையும் சதா என் நினைவில் சுழன்றுகொண்டேயிருந்தன. அப்பொழுது சீர்திருத்த கருத்துகளை கொண்ட பெரியோர்களின் பேச்சும், சிறுசிறு பகுத்தறிவு வெளியீடு நூல்களும், உலக வளர்ச்சி பத்திரிகை செய்திகளும் எனை கூடுதலாக ஊக்குவித்தது. அன்று முதல் பள்ளி கூட்டங்களிலும்—பொது இடங்களிலும் சுகாதாரம்—நாகரீகம், மூடப் பழக்க வழக்கங்கள்—சாதி சனாதனத்தைப்பற்றி பேசவும்—சர்ச்சை செய்யவும் துவங்கி நாளுக்குநாள் வளர்ந்து அகில உலக அரசியல் சர்ச்சை வரை எனை இழுத்துக்கொண்டே போய்விட்டது.

இரண்டாவது உலகப் போரும்-சுபாஸ் சந்திரபோஸ் வருகையும், இந்திய தேசிய அமைப்பும்

1940ம் ஆண்டு இரண்டாவது உலகப் போர் காலகட்டம்—ஜப்பானியர்கள் மலேயா வருகை—ராணுவ ஆட்சி — யுத்த காலம் — இந்தியாவிற்கு சுதந்திரம் வேண்டி இந்தியாவில் கிளர்ச்சி—மகாத்மா காந்தி தலைமையில் நேரு போன்ற பெரும் தேசிய தலைவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள்—பெருமதிப்பிற்கும் மரியாதைக்குமுறிய மாண்புமிகு சுபாஸ்சந்திர

போஸ், ராஸ்பிகாரிபோஸ் அவர்கள் மலேயா வருகை—இந்திய சுதந்திர கழகம் (Indian Independent League) அமைத்தல் அதன் மூலம் மலேயா—சிங்கப்பூர் இந்தியர்களை ஒன்றிணைத்து தேசிய உணர்வை பாய்ச்சி, இந்திய தேசிய ராணுவம் (Indian National Army) மூலம் இந்திய விடுதலைக்கு நமது ராணுவ வீரர்கள் அனுப்பப்பட்டனர். 1943ல் நான் இந்திய சுதந்திர கழகத்தில் உறுப்பினராக இணைந்து—நமது இந்திய தேசிய சுதந்திர வேட்கை வீர வரலாற்றை பிரசாரம் செய்து நமது ராணுவத்திற்கு ஆள் திரட்டும் பணி செய்தேன்.

டச்சு ஏகாதிபத்தியமும் செஞ்சிலுவைப் பணியும்

யுத்தத்திற்குப்பின் 1945ல் டச்சு ஏகாதிபத்தியம் நமது அண்டை நேச நாடான இந்தோனேசியாவை ஆக்கிரமித்து கெடுபிடி செய்து ஆண்டு வந்ததை—இந்தோனேசிய மக்கள் எதிர்த்து, வேண்டும் சுதந்திரம் விடுதலை போர் தொடுத்தனர். மாண்புமிகு டாக்டர் சொக்கர்னோ அவர்கள் தலைமையில் போர் மிகவும் கடுமையாக நடந்த நேரம் (கொரிலாபோர்) பத்துபகாட்டிலிருந்து செஞ்சிலுவை சங்கமூலம் மருந்து—பஞ்சு—துணிவகை சேகரித்து நானும் மற்றும் எனது குழுவினர்களும் கடல் மார்க்கமாக இந்தோனேசிய விடுதலை வீரர்களுக்கு அனுப்பிவைத்து முடிந்த பணி செய்தோம்.

திராவிடர் கழக அமைப்பும்-பணியும்

1945ல் பத்துபஹாட்டில் (Johore St.) திராவிடர் கழகத்தை முறையாக அமைத்து பின் அகில மலேயா திராவிடர் கழக அமைப்புடன் இணைத்து செயல்பட்டோம். அதன் தலைவராக எனது நீங்கா நினைவிற்குரியவர்கள் திருமிகு. நெல்லை ப. முகமது அவர்களும், பொருளாளராக திருமிகு. கவி. வீரப்பா அவர்களும், செயலாளராக நானுமிருந்து பணி செய்ததுடன் 1947ல் கோலாலம்பூரில் நடந்த அகில மலேயா திராவிடர் கழக மாநாட்டிற்கு பத்துபஹாட் திராவிடர் கழக சார்பில் உயர்திரு. தலைவர் நெல்லை ப. முகமது அவர்களை பத்துபஹாட் திராவிடர் கழக பிரதிநிதியாக கலந்துகொள்ள அனுப்பிவைத்தோம்.

பொதுத் தொழிலாளர் சங்கமும் எனது பணியும்

1945ல் பத்துபகாட் பொதுத் தொழிலாளர் சங்கம் அமைத்து அதன் செயலாளராக இருந்து பணி செய்தேன். (பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கம்)

திராவிடநாடு—அனுபந்தமும்—கைதும்

1945ல் பேரறிஞர் அண்ணாதுரை அவர்கள் ஆசிரியராக இருந்து வெளிவந்த 'திராவிடநாடு' என்ற இதழுடன் இணைக்கப்பட்டிருந்த "தொண்டனின் உள்ளம்" என்ற அனுபந்த இதழை பத்துபகாட் திராவிடர்கழக சார்பில் 500 இதழ் அச்சடித்து வெளியிட்டதற்காக கைது செய்யப்பட்டேன்.

கடவுளும்—பிரபஞ்சமும்

பத்துபகாட் திராவிடர் கழக சார்பில் 1946ல் கடவுளும்—பிரபஞ்சமும் (மா. சிங்காரவேலு, B.A., B.L., அவர் எழுதி குடியரசு பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட புத்தகம்) என்ற நூலை 1000 காப்பி அச்சடித்து 40 காசு விலைக்கும், பல தோழர்களுக்கு பரிசாகவும் வழங்கினோம்.

ரப்பர் தோட்ட தொழிலாளர் சங்கமும்-கோரிக்கையும்

1946ல் பத்துபகாட்டில் ரப்பர் தோட்ட தொழிலாளர் சங்கம் அமைத்து — அதன் செயலாளராகவும் — ஜொகூர் மாகாண ரப்பர் தோட்ட தொழிலாளர் ஐக்கிய சங்க அமைப்பாளராகவுமிருந்து பணி செய்தேன். (பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கம்) எஸ்டேட்களில் தொழிலாளர்களிடம் சாதி வித்தியாச கொடுமை—ஆண்டை—அடிமை முறை—தப்புதம் பட்டை அடிக்கும் முறை இவைகளை கண்டித்தும், எல்லோரும் சமமாக நாகரிகமாகவும்—பிற இன மக்கள் நம்மை (இந்தியர்கள் என்று) மதிக்கவும்—தொழிலாளர்கள் என்ற முறையில் வர்க்க அணி அமைப்பில் உரிமையுடன்—சமநிலையில் வாழவேண்டுமென எஸ்டேட்களில் நடைபெறும் பொதுக் கூட்டங்கள்தோறும் பிரச்சாரம் செய்தேன்.

வேலை நிறுத்தமும்—கைதும்

1946ல் கோத்தாதிங்கி (Johore St.) ரப்பர் தோட்ட தொழிலாளர்கள் சங்க தலைமையில் பல எஸ்டேட்கள் சார்பில் எஸ்டேட் நிர்வாகத்திடம் பல கோரிக்கைகளை முன்பாக வைத்து இறுதியாக நடத்திய பேச்சுவார்த்தையில் தோல்வி அடைந்ததால் தொழிற்சங்க தலைவர்கள் என்ற முறையில் என்னையும், எனது அமைப்பு தோழர்களையும் கைது செய்து ஜொகூர்பாரு சிறையிலடைத்தார்கள். இதுபோல் பல எஸ்டேட்டுகளில் கூலி உயர்வு சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்தி பெரும்பான்மையில் வெற்றிபெற்று அக்கால கட்டத்தில் தொழிலாளர்களுக்கு நிறைவான சம்பள உயர்வு கிடைக்க ஆவன செய்யப்பட்டது.

அவசரகால சட்டமும்—சிறையும்—தமிழ்நாடும்

1947ல் மலேயா தேசிய கால அவசர சட்டத்தினால் (Emergency) கைது செய்யப்பட்டேன். எனது நிலையை அரசாங்கத்திற்கு எடுத்து விளக்கியும்—அதை முறையாக பரிசிலிக்க தவறிவிட்டது. இதைப்பற்றி மலேசிய திராவிடர் கழக தேசிய தலைவர் திருச்சுடர் K. R. இராமசாமி, AMN அவர்கள 11, 12, 13—6—1971 தேதிகளில் கோலாலம்பூரில் நடைபெற்ற மலேசியா திராவிடர் கழக வெள்ளிவிழா மாநாட்டில் வெளியிடப்பட்ட வெள்ளி விழா மலரில் தனது இலட்சியப் பயணம் என்ற கட்டுரையில் :

" நாட்டில் அவசரகாலச் சட்டம் கொணர்ந்ததும் தொழிற் சங்கத்திலும், கழகத்திலும் ஈடுபாடு கொண்டு விளங்கியவர்கள் பலர் தினரமலைநலமாயினர். சிலர் ஐயத்தின் பேரில் நாடு கடத்தப்பட்டனர். சிலர் பொறாமைக்காரர்களின் தப்பான தகவல்களினால் அன்றைய ஆங்கிலேய ஆட்சியினரிடம் அவதிக்குள்ளாயினர். தங்களை யார் எனட்தை நிருபிக்க அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி சொல்லொண்ணாதது. சிறையில் அடியும்—உதையும் சித்திரவதையும் பெற்று வெளி வந்தனர். ஏன இதனை எற்றார்கள்? சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வும், ஏமாற்றம இல்லாது பணிதாரலவைவலும சமம என்ற கொள்கையை உரைத்த காரணத்திற்காகத்தான். இந்த தியாகச் செம்மல்களுக்கு நமது நெஞ்சார்ந்த நன்றியினை கழக வெள்ளி விழாவின்பொழுது நாம தெரிவிக்க கடமைப் பட்டுள்ளோம்."

என்று எழுதியுள்ளார். கைது செய்யப்பட்ட நான் முதல் பத்து தினங்கள் பத்துபகாட் லாக்கப்பில் வைக்கப்பட்டு—பின் பதினைந்து தினங்கள் ஜோகூர்பாரு லாக்கப்பில் வைக்கப்பட்டேன்—ஜோகூர்பாரு மத்திய சிறையில் ஓராண்டு தொடர்ந்து பாதுகாப்பு சிறை, சிங்கப்பூர் மத்திய சிறை—சென்ஜோன்ஸ் ஹைலேண்ட் பாதுகாப்பு சிறை—பேர்ட் கிள்ளான் காவல் சிறை, 1950 அகஸ்டில் தமிழகத்திற்கு நிற்பந்த நிலையில் அனுப்பப்பட்டேன். தமிழகம் சென்றடைந்ததும் சென்னை மத்திய சிறை வரவேற்பு, மாம்பலம் லாக்கப்பில் சிலநாள், அடி, உதை, அபிசேகம்—தொடர்ந்து பல ஆண்டுகள் கண்காணிக்கப்பட்டேன். தமிழகத்தில் தந்தை பெரியார் அவர்களின் நற்பணியை தொடர்ந்து பின் பற்றி தொண்டனாக இதுவரை இருந்து என்னால் முடிந்த நற்பணியினை செய்துவருகிறேன்.

அன்னை நாகம்மையை பழித்த அசிங்கம்

1979ல் நமதன்னை நாகம்மையை அவமதித்து எழுதிய கண்ணதாசன் என்ற நபரை கண்டிக்கும் வகையில் திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீரமணி, M.A. B L., அவர்கள் தலைமையில் நடந்த சட்டசபை மறியலில் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் 15 நாள் காவலில் வைக்கப்பட்டேன். சிறையில் பழம்பெரும் சுயமரியாதை தோழர் நாகை முருகேசன் அவர்களுடன் ஒரே சிறைகூடத்தில் இருக்கும் வாய்ப்பு அமைந்தது இவர் தந்தை பெரியார் தோழர் மா. சிங்காரவேலு அவர்களுடன் இணைந்து பணி செய்தவர்).

ஆரிய சாஸ்திரம் மனுநூல் எரிப்பும்—கைதும்

திராவிடர் கழக மத்திய கமிட்டி தீர்மானப்படி 1981 மே 17ல் ஆரிய சாஸ்திரம் மனு நூலை தீயிட்டு கொளுத்திய வகையில் கைது செய்யப்பட்டேன்,

1937 முதல் சுயமரியாதை இயக்க இடுபாடும், 1946ல் மலேசியா திராவிடர் கழகம் அமைய பாடுபட்ட அறிஞர் பெருமக்கள் அணியில் ஓர் தொண்டனாக இருந்து பணி செய்தவன், 1946ல் கூடிய அகில மலேயா மத்திய திராவிடர் கழக மாநாடு தீர்மானப்படி தந்தை பெரியார்—திராவிட நாடு தளபதி பேரறிஞர் அண்ணா—புரட்சி கவிஞர் பாரதிதாசன் அவர்களையும் மலாயா மத்திய திராவிடர் கழக சார்பில் வரவழைக்க பத்துபகாட் திராவிடர் கழக சார்பில் நிதி சேர்த்து மலேயா மத்திய திராவிடர் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது—மலேயா கழக ஏடு இனமணியை வரவழைத்து பத்துபகாட் தமிழ் மக்களிடம் பரப்பிய பணியும் செய்தேன்,

நான் மலேசியா—சிங்கப்பூர் நாடுகளுக்கு வருகை தந்து தங்கள் அனைவர்களையும்—பார்க்கவும்—பழகவும் பெரும் நல்வாய்ப்பை தந்துதவிய மலேசிய திராவிடர் கழகத்துக்கும் — ஆட்சி குழுவிற்கும், கிளைக்கழக நிர்வாகிகளுக்கும், தேசிய தலைவர் திருச்சுடர் K. R. இராமசாமி, A.M.N. அவர்களுக்கும் எனது நல்லுணர்வான நன்றியையும் — வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

தங்களன்புள்ள,

மலேயா சக்திமோகன்

பெரியார் பெருந்தொண்டர்

இன்றைய எனது நிலை

எனது: தாய்-தந்தை எனது அன்பு நாடான மலேயா மண்ணின் அணைப்பில் மீளாது உறங்கிக் கொண்டிருக் கிறார்கள். உடன்பிறந்தவர்கள் யாரும் எனக்கு இல்லை.


ஊருமில்லை—உறவுமில்லை !

யாதுமூரே—யாவரும் கேளிர் ! இது உண்மை நிலை. துணைக்கு வந்தாள் ஒருவள்—காலம் கடந்து போய் விட்டாள் !

அவள் கொடுத்து சென்ற ஒரு பெண் — மூன்று பிள்ளைகளிருக்கிறார்கள், விளையாடுகிறார்கள் ! படிக் கிறார்கள்.

கட்டிய துணியுடன் வந்தேன் — காலம் போய்க் கொண்டே இருக்கிறது. கவலைப்படவில்லை !

கவலையெல்லாம் தமிழரிடையே சாதி எப்ப ஒழியு மென்று ? தமிழரிடையே சாதி ஒழிந்தால்—பார்பனியம் காணாமல் போய்விடும் : அந்த நாள் எந்த நாளோ ?



தந்தையின் அறிவுரை

நாணயம்

உண்மையான பொதுத்தொண்டு ஆர்வமுள்ள மனிதன் தனது முயற்சி உழைப்பு—செல்வம், 'தியாகம்' ஆகியவைகளை சாதி ஒழிப்புக்காக செலவழிப்பதுதான் நாணயமும், ஒழுக்கமும், யோக்கியமும் ஆன காரியமாகுமே தவிர, மற்ற எந்த காரியத்திற்குச் செலவழிப்பதும் மேற்காட்டிய குணங்களுக்கு எதிர்மறை குணங்களேயாகும்.

[—விடுதலை' 13—12—60]

கல்வி

படிப்பு எதற்கு? அறிவுக்கு. அறிவு எதற்கு? மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து, மற்ற மனிதனுக்கு உதவியாய்—தொல்லை கொடுக்காதவனாய்—நாணயமாய் வாழ்வதற்கு.

பாரி பிரிண்டர்ஸ், திருவொற்றியூர், சென்னை-600 019